**சார்பு நீதிமன்றம், மேட்டூர்**
**முன்னிலை: திரு. எல். கமலக்கண்ணன், பி.எ., எம்.எல்.,**
**சார்பு நீதிபதி, மேட்டூர்**

**திருவள்ளுவராண்டு 2055, குரோதி ஆண்டு, பங்குனி திங்கள் 10 ஆம் நாள்**
**2025 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாள் திங்கள்கிழமை**

**வழக்கிடை மனு எண்: 02 / 2024**
**in**
**அசல் வழக்கு எண்: 277 / 2014**

1. கமலா
2. ரத்தினம்
3. சேகர்
4. செல்வராஜ்
5. குமார்
6. மைனர். தாமரைச்செல்வம் ... மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

/எதிராக/

மதியழகன் ... எதிர்மனுதாரர் / வாதி

இம்மனு 14.11.2024 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 24.03.2025ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி. G. மாலதி, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. B. பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

இம்மனு வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை செய்ய வழக்கை மறுதிறப்பு

செய்ய கோரி மனுதாரர்கள் தரப்பில் உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 151 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:**

மேற்படி அசல் வழக்கில் 2, 3, 4, 5, 6 மற்றும் 8 ஆகிய பிரதிவாதிகள் சார்பாக இந்த மனுவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு கடந்த 03.04.2024 ம் தேதி வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டிருந்தது. அன்றைய தினம் மனுதாரர்களின் வழக்கறிஞர் வேறு வேலையில் ஈடுபட்டிருந்ததால் வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை செய்ய முடியவில்லை. இது வேண்டுமென்று ஏற்பட்டதல்ல. பிரதிவாதிகள் தரப்பில் வாதியை குறுக்கு செய்யாததால் சாட்சியம் முடிக்கப்பட்டது. எனவே வா.சா.3 னின் குறுக்கு விசாணைக்காக வழக்கை மறுதிறப்பு செய்ய கோரி இம்மனுவை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளார்கள்.

3. **எதிருரையின் சுருக்கம்:**

இம்மனு பொய்யானது, உண்மைக்கு புறம்பானது, சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. இவ்வழக்கு விசாரணைக்காக 03.04.2024 அன்று வா.சா.3 ஐ மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டிருந்ததது உண்மை. அன்றைய தினம் மனுதாரர்கள் தரப்பில் யாரும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு மற்ற சாட்சிகளை விசாரிப்பதற்காக வாய்தா பிறப்பிக்கப்பட்டது என்பதே உண்மை. ஆனால் மனுதாரரின் வழக்கறிஞர் வேறு வேலைகளில் ஈடுபட்டிருந்ததால் விசாரணை செய்ய இயலாமல் போனது என்பது மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கோரும் காரணமாக ஏற்க இயலாது என்பதே சட்ட நிலையாகும். மனுதாரர் தரப்பில் வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை செய்ய போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும் மனுதாரர் குறுக்கு விசாரணை

செய்யாததால், விசாரணை முடிக்கப்பட்டது என்ற நிலையில் தற்போது வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவு செய்ய வேண்டும்.

4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா? என்பதே ஆகும்.

5. இருததரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. இருதரப்பு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. **தீர்வு:**

வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. வாதி இவ்வழக்கை ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரியும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்துள்ளார். வாதி தரப்பில் வா.சா.3 தரப்பில் முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் கடந்த 22.02.2024ம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் வா.சா.3 ஐ 9 மற்றும் 10 பிரதிவாதிகள் தரப்பில் கடந்த 03.04.2024ம் தேதி குறுக்கு விசாரணை செய்துள்ளார்கள். அன்றைய தினம் மனுதாரர்கள் தரப்பில் வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை செய்ய தயாராக இல்லாத நிலையில் மேற்படி குறுக்கு விசாரணைக்கான வாய்ப்பு முடிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய மனுதாரர்கள் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குறுக்கு விசாரணை செய்யப்படாத சாட்சியம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பதால் மேற்படி சாட்சியை மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிப்பதால் வாதிக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. மாறாக மேற்படி வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை செய்யவில்லை என்றால் மனுதாரர்களுக்கு பாதிப்பு

ஏற்படும். எனவே வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை செய்ய வழக்கை மீண்டும் திறக்க அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு ஏற்றதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

7. முடிவாக, இந்நீதிமன்றம் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் நாள் திங்கள் கிழமை இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

L KAMALAKANNAN

Digitally signed by L KAMALAKANNAN
Date: 2025.03.24 18:32:00 +0530

**சார்பு நீதிபதி,**
**மேட்டூர்**

**மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம்:**

இல்லை

**எதிர்மனுதாரர் / வாதி தரப்பு சாட்சி, சான்றாவணம்:**

இல்லை

L KAMALAKANNAN

Digitally signed by L KAMALAKANNAN
Date: 2025.03.24 18:32:05 +0530

**சார்பு நீதிபதி,**
**மேட்டூர்**